வீடியோ கமரா,
T. V. வீடியோ டெக்
ஆகியவற்றை
உத்தரவாதத்துடன்
உடனுக்குடன்
திருத்திக் கொள்வதற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 07 புதன்கிழமை 22 - 12 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 26

உங்கள் இல்லங்களில்
நிகழும்
மங்கள நிகழ்வுகளின்
நவீன முறை வீடியோ
படப்பிடிப்பிற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

## மட்டக்களப்பில் 4 படையினர் பலி!

கொழும்பு, டிச 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் இடம் பெற்ற மோதல் ஒன்றில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கதிரவெளிப் பகுதியில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அவ்வேளை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

இதில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-எ-த)

## தென் மாகாணசபையின் ஆளுநர் பாக்கீர் மாக்கார் ராஜினாமா

கொழும்பு, டிச 22

தென்மாகாண ஆளுநரான அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் நேற்று மாலை தனது பதவியை ராஜினாமாச் செய்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை 5.00 மணியளவில் ஆளுநரின் இல்லத்துக்குத் தொடர்பு கொண்டு விசாரித்தபோது இச்செய்தி ஊர்ஜிதம் செய்யப்பட்டதாக பி. பி. ஸி தெரிவித்தது.

புதிய ஆளுநராக திரு. டன்ஸ்ரன் ஜெயவர்த்தனா நியமிக்கப்படலாம் என்று சொல்லப்படுகிறது.

அவரிடம் இது பற்றி விசாரிக்க முயற்சி எடுக்கப்பட்டது ஆனால் அது கைகூடவில்லை என்று பி.பி.ஸி தெரிவித்தது. (இ-6)

# டி.பி. அரசில் இனபேதம் மிகத் தீவிரமாக தலைதூக்குவதாக தொண்டா சாடல்

## அதனை அம்பலப்படுத்துவதே தனது நோக்கம் என்கிறார்

கொழும்பு, டிசம்பர் 22

இந்த நாட்டில் எப்போதுமே இனபேதம் இருந்தது.

ஜே.ஆர்.காலத்தில் இருந்தது. பிரேமதாஸ காலத்தில் இருந்தது. ஆனால் அவர் அதனை எதிர்த்து உறுதியாக இருந்தார்.

டி.பி. விஜேதுங்காவின் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததும் இனபேதம் மீண்டும் மிகத் தீவிரமாகத் தலைதூக்குகிறது.

அரசுக்கு வெளியே வந்து அதனை அம்பலப்படுத்துவதே எனது நோக்கம்.

இவ்வாறு அமைச்சர் தொண்டமான் பி. பி. ஸிக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

தான் கேட்பது எல்லாம் கொடுக்கப்படுகிறது என்ற மனப்பான்மையையும் அரசாங்கம் வளர்த்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளருக்கு அமைச்சர் தொண்டமான் வழங்கிய செவ்வியின் முக்கிய பகுதிகள் வருமாறு -

நானும் பிரதம மந்திரியும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்றோம் எங்களுக்குள்ளே ஓரளவு ஒற்றுமை உண்டு. அப்படி இருக்கும்போதுகூட, இந்த ஒற்றுமை ஏற்பட்டாலும் காமினிக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும். மத்திய மாகாண சபையில் நடைபெறவுள்ள வாக்கெடுப்பில் இ.தொ.கா உறுப்பினர்கள் காமினியைத்தான் ஆதரிப்பார்கள்.

பிரதமருடன் குறிப்பிட்ட ஒரு விஷயம் பற்றி மட்டும் பேசவில்லை. பிரச்சினை ஏற்பட்டால் எந்த அடிப்படையில் தீர்ப்பது என்பது பற்றித்தான் பேசிக்கொண்டு இருக்கிறோம். அதில் நல்ல முடிவு ஏற்பட்டுள்ளது. இம்முடிவு பற்றி சில தினங்களில் ஜனாதிபதியுடன் கலந்து பேசி ஒரு தீர்மானம் எடுக்கப்படும்.

உண்மை என்னவென்றால் இந்த நாட்டில் எப்போதுமே

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் 8 குளங்கள் உடைப்பு

மழைகாரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள மொத்தம் 546 குளங்களில் 8 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன என்றும் மீதமுள்ளவை அனைத்தும் நிரம்பி வழிகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் வவுனியா, நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 500 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. (இ-கி)

### பதுங்கு குழியில் விழுந்து சிறுவன் மரணம்

ஹெலிக் கொப்டரைக் கண்டு பதுங்கு குழிக்குள் இறங்க முயன்ற மூன்று வயதுச் சிறுவன் பதுங்கு குழிக்குள் இருந்த நீரில் மூழ்கி மரணமான சம்பவம் நேற்று கொடிகாமம் கச்சாய் தெற்கில் இடம் பெற்றது.

கணபதி நாகதாசன் என்ற சிறுவனே மரணமானவர் ஆவார்.— (இ-117)

### கொழும்பில் முகமூடி கொள்ளையர்

நேற்றுக் காலை கொழும்பு டார்லி வீதியில் உள்ள சிகரெட் விற்பனை நிலையம் ஒன்றில் முகாமையாளரையும் இன்னொரு ஊழியரையும் மிரட்டி இரண்டரை லட்சம் ரூபா பணத்தை ஆயுதந்தரித்த முகமூடி அணிந்த குழு ஒன்று கொள்ளை அடித்துச் சென்றது.

### மூர்சந்தி முரளி



சம்பளம் கிடைச்சால் போதும் என்ற நினைப்புப் போல......!

## வேலை நிறுத்தத்தை கைவிடத் தீர்மானம்

கொழும்பு, டிச 22

மத்திய மாகாணத்தில் வேலை நிறுத்தம் செய்து வந்த தோட்டத் தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்தைக் கைவிட தீர்மானித்துள்ளதாக மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் எஸ். சதாசிவம் தெரிவித்தார்.

மத்திய மாகாண சபையில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏழு பேர் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக தகவல் வெளியானதை அடுத்து தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்திருந்தனர்.

ஆனால் அந்த உறுப்பினர்கள் ஏழு பேரும் கடத்தப்படவில்லை என்ற தகவல் வெளிவந்ததை அடுத்து தொழிலாளர்கள் தங்கள் வேலை நிறுத்தத்தைக் நேற்று கைவிடத் தீர்மானித்தனர். (த-எ-6-5)

### சீமெந்து கட்டடத் தொழிலாளர் ஊர்வலம்

தென்மராட்சி, டிச 22

சீமெந்து கட்டடத் தொழிலாளர்களுக்கு இடைநிறுத்தப்பட்ட நிவாரணத்தை தொடர்ந்து வழங்கக் கோரி தென்மராட்சி சீமெந்து கட்டடத் தொழிலாளர் சங்கத்தினர் இன்று காலை 9மணிக்கு ஒருங்கிணைந்த ஊர்வலம் ஒன்றை நடத்த உள்ளனர்

மீசாலைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலம், கண்டி வீதி வழியாக சாவகச்சேரி பிரதேச செயலகத்தை அடையும். பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படும். (த-117)

## பொருள்களுடன் வந்த படகுகள் நீரில் மூழ்கின

தென்மராட்சி, டிச. 22

கடந்த வெள்ளி இரவு வீசிய பலத்த காற்றினால் கிளாலிக் கடலில் உணவுப் பொருள்களுடன் வந்த பதினாறு படகுகள் நீரில் மூழ்கின. இவற்றுள் நேற்று முன்தினம் வரை பத்துப் படகுகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-117)

### ருகுணுவில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், டிச. 22

மழை காரணமாக வாதுவக் கப்பலில் ஏற்ற முடியாது போன தபால் பொதிகளை ருகுணு கப்பலில் அனுப்புவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு ஏதுவாக வெளியூர் தபால்களை இன்று பிற்பகலுக்கு முன் தபால் பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பருத்தித்துறையில் உள்ள 51 தபால் பொதிகளுடன் மேலதிகமாக ஒரு பொதியும் ருகுணுக் கப்பலில் அனுப்பி வைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ருகுணுக் கப்பல் நாளை பருத்தித் துறையில் இருந்து புறப்பட ஏற்பாடாகி உள்ளது. (சி-162)

## இருந்த அதிகாரங்களையும் மத்திய அரசு பறித்துவிட்டது

### சந்திரிகா முறையிடுகிறார்

கொழும்பு, டிச. 22

தமக்கிருந்த அற்ப சொற்ப அதிகாரங்களையும் மத்திய அரசு பறித்து விட்டதாக மேல் மாகாணசபை முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க முறையிட்டுள்ளார்.

மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து மருத்துவ மனைகளையும் பொது மற்றும் மாவட்ட மருத்துவ மனைகளையும் மத்திய சுகாதார அமைச்சு பொறுப்பேற்று விட்டதாக அவர் கூறியுள்ளார். (இ-எ)

## மன்னார் குடாவில் இருந்து தாழமுக்கம் நீங்கும் அறிகுறி

கொழும்பு, டிச. 22

மன்னார் வளைகுடாவில் நேற்று நண்பகல் நிலைகொண்டிருந்த தாழமுக்கம் படிப்படியாக வேகம் குறைந்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தை மேற்கோள் காட்டி இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது

இந்த தாழமுக்கம் இலங்கையை விட்டு வடமேற்குத் திசையில் நகர்ந்து செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டது

இதன் விளைவாக நீர்கொழும்பு தொடக்கம் காங்கேசன்துறை வரையான கரையோரப் பகுதியில் கடும் காற்றுடன் மழையும் காணப்படும் என்றும்—

அந்தப் பகுதியில் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு கரையோரத்துக்கு அப்பால் மையங்கொண்டிருந்த தாழமுக்கம் அங்கிருந்து தென்மேற்குத் திசையாக நகர்ந்து சென்று மன்னார் வளைகுடாவில் நிலை கொண்டிருந்ததாக நேற்று நண்பகல் அறிவிக்கப்பட்டது. (த-எ-5-162)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும் முயற்சி முறியடிப்பு

## முறையாக இல்லையென நிராகரிக்கப்பட்டது

கொழும்பு டிச. 22

மத்திய மாகாண முதலமைச்சர் டபிள்யூ. பி. பி. திஸநாயக்காவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை, ஒழுங்குமுறைப்படி சமர்ப்பிக்கப்படவில்லை என்று கூறி அதனை சபைத் தலைவர் நிராகரித்தார்.

மாகாணசபை உறுப்பினர் காமினிராஜபக்ஷ இது தொடர்பாக சமர்ப்பித்த ஒழுங்குப் பிரச்சினையை சபைத் தலைவர் சரத்கொங்காலே ஏற்றுக்கொண்டார்.

மத்திய மாகாணசபையின் கூட்டம் பள்ளேகல கம்உதாவ மண்டபத்தில் நேற்று நடைபெற்றது

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் முதலமைச்சருக்கு எதிராகத் திட்டவட்டமான குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்படவில்லை என்று திரு ராஜபக்ஷ தனது ஒழுங்குப் பிரச்சினையில் தெரிவித்திருந்தார். இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக எதிர்கட்சிகளுடன் சேர்ந்து வாக்களிக்கப்போவதாக இ.தொ.கா. அறிவித்திருந்தது தெரிந்ததே. (இ-எ)

# கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட 7 பேரும் செய்தியாளர் மாநாட்டில் தோன்றினர்

## ஐ. தே. கவை ஆதரிக்கப் போவதாக அறிவிப்பு

கொழும்பு, டிச. 22

கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட தென்மாகாண சபை இ. தொ. கா. உறுப்பினர்கள் ஏழு பேரும் செய்தியாளர் மாநாடு ஒன்றில் தோற்றித் தாம். ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இதனை அடுத்து இந்த ஏழு பேரும் ஒழுங்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ளனர் என்றும் —

பின்னர் இ. தொ. காவில் இருந்து அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்றும் — இ. தொ. கா தலைவர் எஸ். தொண்டமான் நேற்று பி. பி. ஸி. 'சந்தேசய'வுக்குத் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக காமினி திஸநாயக்காவுக்கு ஆதரவளிப்பது என்று தாம் அளித்த வாக்குறுதியில் மாற்றம் ஏற்படாது என்று கூறிய தொண்டமான், அது பற்றி அரசுக்கும் கூட அறிவிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தார். (இ-ஏ-6)

## கப்பலில் இருந்து பொருள் இறக்கும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 22

கடற் கொந்தளிப்பு சற்றுத் தணிந்ததை அடுத்து பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகின.

காங்கேசன் துறையில் தரித்து நின்ற ''ருகுணு'' 'மாஹோ' ஆகிய இரு கப்பல்களும் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்தன.

ருகுணுவில் இருந்து உரவகைகளும், மாஹோவிலிருந்து மண்ணெண்ணெய் பரல்களும் நேற்று இறக்கப்பட்டன.

எஞ்சிய உரவகைகளை இறக்கும் வேலை இன்று நடைபெறும். ருகுணு கப்பல் நாளை காலை பருத்தித்துறையில் இருந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகள் கண்டனம்

கொழும்பு, டிச. 22

நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிராகரித்த மத்திய மாகாண சபைத் தலைவரின் முடிவை எதிர்க்கட்சியினர் பலமாக கண்டனம் செய்துள்ளனர்.

அப்பிரேரணையின் போது மயமான காரணங்கள் உண்டா அல்லது இல்லையா என்பது குறித்து அப்பிரேரணை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருத்தல்வேண்டும் என எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சபைத் தலைவர் கட்சி சார்பானவராக நடந்து கொண்டுள்ளார் என்பதால் அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பி. பி. ஸி சிங்கள சேவைக்குத் தெரிவித்தார். (இ-6)

# அதிகாரிகள் அசமந்தப்போக்கு உரிய நேரம் நிவாரணம் இல்லை

## தமிழீழ பொது நிர்வாகம் கண்டனம்

யாழ்ப்பாணம், டிச. 22

கடந்த ஐந்து தினங்களாக பெய்த பெருமழையாலும் அதற்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும் பாதிக்கப்பட்ட மக்கள் உணவு வசதி இன்றியும், சுகாதார வசதியின்றியும் பெரிதும் கஷ்டப்படுகின்ற வேளையில் சில அதிகாரிகளினதும் கிராம சேவையாளர்களினதும் அசமந்தப் போக்கினால் உரிய காலத்தில் அந்த மக்களுக்கு நிவாரண வசதிகள் கிடைக்காமல் போயுள்ளன

தமிழீழ பொது நிர்வாகத் தொடர்பகப் பொறுப்பாளர் திரு. சி. கண்ணன் நேற்று வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்போது பெய்யும் மழையினால் மீண்டும் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் முகாம்களில் தங்கியுள்ள மக்கள் மட்டுமன்றி நிரந்தர குடியிருப்புகளில் வசித்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி வடக்கு உதவி

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

E. T. 900 Yamaha ஜெனரேட்டர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (28527)

புதிய Singer (Zig - Zag model 1288) மெஷின், கட்டில் மெத்தை மற்றும் தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு. இல. 27, முதலாம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி (சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குப் பின்னால்) (28524)

### மலிவு விற்பனை

மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இலவசமாக நேர அட்டவணை வழங்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-6810)

### வாழ்த்து மடல்கள்

அழகிய புதிய டிசைன்களில் நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவில். ஆனந்த்ஸ் புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (6862)

### தேவை

பாலர் கல்விக் கழகத்தின் உதவி ஆசிரியையாகவும், லிகிதராகவும் கடமையாற்றக் கூடிய O/L சித்தியடைந்தவர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்துடனும், மூலச்சான்றிதழுடனும் 25-12-93 சனி காலை 9 மணிக்கு நீராவியடி கல்லூரி வீதியிலுள்ள நாவலர் பாலர் சோலைக்கு நேரில் சமுகம் தரவும். (28537)

### வகுப்பு

ஜேர்மன் வளாகங்களிலும், தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் படிக்க விரும்பும் மாணவர்கள் ஜேர்மன் மொழி (Deutsch) பயிலவும் விலாசங்கள் பெறவும் தொடர்பு கொள்க. S. சொர்ணலிங்கம், 4, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (மனோகரா தியேட்டர் - காங்கேசன்துறை வீதி அருகில்) (28468)

### தவறிவிட்டது

L. M. L. வீல் கப் (2) கொடிகாமத்திற்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் கண்டி வீதியில் 19-12-93 இரவு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். வஸ்தியன்ஸ், 390, பிரதான வீதி யாழ்ப்பாணம். (28536)

### கலண்டர், டயறி வகைகள்

லீலா கலண்டர் சகல விதமான டயறி வகைகள், கிறிஸ்மஸ் கார்ட், அன்பளிப்பு அடிப்பதற்குரிய கலண்டர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி/6698)

### MAKE UP CLASSES

Basic Make up and Modern Hair Dressing புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன. சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். Yogi Home Science Academy 71, Nayanmar Veethy Kachcheri Nallur Road, Nallur, Jaffna. (28187)

### ICING CLASSES


Wilton Sugar Flowers, Fondant Icing Structures வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாக உள்ளன. சேர விரும்புவோர் 24-12-93க்கு முதல் தொடர்பு கொள்ளவும்: Yogi Home Science Academy, 71, Nayanmar Veethy, Kachcheri Nallur Road, Nallur, Jaffna. (28486)

### இந்தியா குடே

இலங்கை ஏஜன்டான P. S. சுந்தரம் அன் சன்ஸ் அவர்கள் தமிழ்முகத்தில் ஏஜன்டாக எம்மை நியமித்துள்ளார்கள். வாடிக்கையாளரின் நன்மை கருதி விலை குறைத்துள்ளோம். மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி-6696)

---

## பாச நினைவுகளுடன்....
## முதலாம் ஆண்டு
## நெஞ்சகலா நினைவலைகள்



**அமரர் செல்லையா சுப்பிரமணியம்**
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

அன்னையின் மடியில் அழகு நவாய்: **03 - 03 - 1928**
கடலன்னை மடியில் காவியமாய்: **02 - 01 - 1993**

திதி: **22 - 12 - 1993**

கிழவர்கள் கொடுமையினால் கிளாலிக் கடற்பரப்பில்
ஆள வடுக்களுற்று அகன்றவையோ - ஈழமண்ணின்
உண்மைதனை உலகறிய ஊராள்வோர் காட்டி வைத்தார்
எண்ணி மனம் வாடுகிறோம் நாம்!

சீர்கெட்ட செயல் செய்த ஸ்ரீலங்கன் கடற்படையை
போர்மூட்டி எம்மைத்தர் புதைத்துவிட்டார் - நீர்சொட்ட
எம்மினத்தை அழித்தவர்கள் கப்பல்களும் கையளித்து
கும்மிருட்டிற் குலைந்தார்கள் பார்!

தந்தையே! தாரகையே! தர்மத்தின் வழிநின்று
விந்தைபல வாற்றிநின்ற எம்முயிரே - சிந்தையிலே
ஆலயத்தை நாமமைத்து அர்ச்சித்தோம் உம் பாதம்
ஞாலத்தில் வாழும் உம் நாமம்!

● ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள் ●

(02-01-1993 அன்று கிளாலி கடற்பரப்பில் காடையர்கள் கொடுமையினால் உயிரிழந்த அனைவருக்கும் எம் அஞ்சலிகள்)

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

கண்டி வீதி,
கொடிகாமம்.

(28484)

---

## அறிவித்தல்

### வேலணை ப. நோ. கூட்டுறவுச் சங்கம்
(மட்டுப் படுத்தப்பட்டது)

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி யாழ்ப்பாணம் அவர்களின் அறிவுறுத்தலின் பிரகாரம், 1967 / 68 ஆம் ஆண்டு விவசாயக் கடன் தொடக்கம் — 1978 ஆம் ஆண்டு விவசாயக் கடன் வரை வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் மூலம் விவசாயக் கடன் பெற்ற விவசாயிகள் மீதியாக உள்ள கடன் தொகையை 31 — 03 — 94 க்கு முன் முழுதாகச் செலுத்தினால் எவ்வித வட்டியும் அறவிடப்பட மாட்டாது. ஆகவே கடன், மீதியாகச் செலுத்த வேண்டியவர்கள் வேலணை ப. நோ. கூ. சங்கத்துடன் தொடர்பு கொண்டு 31 — 03 — 94 க்கு முன் கடனை மட்டும் செலுத்தவும். செலுத்தும் பட்சத்தில் வருங்காலத்தில் வழங்கப்படும் விவசாயக் கடன்களைப் பெற உரித்துடையவர்களாகின்றீர்கள் என்பதை அறியத் தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்


வேலணை -
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(C / 6742)

---

## ஈராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 19 — 04 — 1941



ஆண்டவன் அடியில்: 14 — 01 — 1992

**அமரர் வாரி இராசநிதி (நிதி)**
யாழ். அரியாலை

திதி. 22 - 12 - 1993

அன்பின் அரவணைப்பால், பண்பின் சிகரமாய் எங்களை வளர்த்து ஆளாக்கிய எங்கள் அன்பு பப்பாவே! எம்மை விட்டுப் பிரிந்து ஈராண்டு சென்றாலும், பப்பா என்ற சொல் எம்மைவிட்டு என்றென்றும் அகலாது.


உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி, அன்புப் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரங்கள், உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்:
இ சுரேஷ் (இத்தாலி)
(மகன்)
660, கண்டி வீதி, அரியாலை. (28480)

---

## கோபுரமாய் உயர்ந்த எங்கள் குலத்தலைவன் பதமலரில்...
## முதலாம் ஆண்டின் அஞ்சலி மலர்கள்



அமரர்
**சதாசிவம் பாலசுப்பிரமணியம்**
(கொடிகாமம், சரஸ்வதி பேக்கரி உரிமையாளர்)

மண்ணில்: **16 — 05 — 1951**
மனதில்: **02 — 01 — 1993**

திதி: 1993 - 12 - 22

சின்னவிழி யெங்கே சிரித்திசைக்கும் பேச்செங்கே
வன்ன நடையெங்கே வாய்மையனே - பொன்னுடலை
கொடுமனதுக் காடையரால் கிளாலியிலே ஈந்துவிட்டு
நெடும்பயணம் போயினையோ நீ!

நெஞ்சிருக்கும் வரையுந்தன் நினைவிருக்கும் -
உன்சேவை
கொஞ்சு மலக் கோபுரத்தில் நிறைந்திருக்கும் -
அஞ்சியினி
எத்தமிழன் வாழ்வதில்லை எத்தர்தலை நிலமுருளும்
சந்ததமும் உனைத்துதிப்போம் நாம்!

02-01-1993இல் கிளாலிக் கடற் பயங்கரத்தில் எம் தந்தையுடன் உயிரீந்த அனைவரையும் இந்நாளில் அஞ்சலித்தோம்.

இன்று எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

— குடும்பத்தவர்.

[illegible] வீதி,
கொடிகாமம். (28485)

---

## மூன்றாவது ஆண்டு கண்ணீர் பூக்கள்



**செல்வன் பிருந்தன் தனபாலசிங்கம்**

ஆனந்த உதிப்பு: **31 — 05 — 1985**
ஆறாத்துயர் நினைப்பு: **22 — 12 — 1990**

ஆண்டு மூன்று ஆகியதோ
ஆருயிரே உனை இழந்து
ஆறிடுமா எம் துயரம்
அன்பே உனை மறந்து
அலைகடலில் துரும்பாக ஆடுகிறோம்
உந்தன் நினைவில்
அணையாத தீபமென ஒளிர்வாய் என இருந்தோம்
அரும்பினிலே கிள்ளிய எம்பெருமான்
செயலை என்னவென்போம்.

என்றும் உன் மலர்பாதங்களைத் தொழும்:
அன்பு அப்பா அம்மா அக்கா,
தங்கை உறவினர்கள்.

4, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்,
சரசாலை மத்தி, சாவகச்சேரி. (28534)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 05 — 10 — 1918



இறப்பு: 22 — 12 — 1991

**அமரர் தூசப்பிள்ளை அருளானந்தம்**

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும், உங்கள் நினைவு எம் இதயங்களில் என்றென்றும் சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டே இருக்கும்

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

36, புவானியார் கோவில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், (6365)

---

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 09 — 12 — 1959



உதிர்வு: 22 — 12 — 1984

**அமிர்தலிங்கம் செல்வகுமாரன்**
(முன்னாள் ஆங்கில உதவி ஆசிரியர் மன்/நறுவிலிக்குளம் றோ. க. த. பாடசாலை, மன்னார்)

என்றும் எங்களிற்கு ஒளிதருவேன் என்றிருந்த எம் குலவிளக்கே! சிங்கள அரக்கனுனை சிதறடித்து அணைத்து விட்டதால், ஆண்டுகள் ஒன்பது உன்பிரிவால் உருவிழந்து வாடி, நின் ஆத்மசாந்திக்காய்வேண்டுகிறோம்.

என்றும் உன்பிரிவால் துயருறும்!
அம்மா, ஐயா, அக்காமார்,
அண்ணன்மார், தங்கை, தம்பிமார்,
மைத்துனர், மருமக்கள்.

த. அமிர்தலிங்கம்
வடக்குத்தெரு,
தொண்டமனாறு. (6857)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சர்வாதிகாரத்தின் ஆரம்பம்

ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வது, அரசுக்கு எதிரான உணர்வுகளை மக்களிடையே தூண்டிவிடுவது ஆகியவற்றுக்குக் கடும் தண்டனை வழங்கும் சட்டவிதிகளை ஜனாதிபதி திங்கட்கிழமை பிரகடனம் செய்திருக்கிறார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் — பொதுசன பாதுகாப்பு சட்டத்தின் ஐந்தாவது பிரிவின் கீழ்—இந்தச் சட்டவிதிகளை அவர் பிரகடனப்படுத்தியிருக்கிறார். இச்சட்டவிதிகள் ஏற்கனவே நடைமுறையில் இருந்தவை. சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னரே இவை நீக்கப்பட்டிருந்தன.

மத்திய மாகாணத்தில் தோட்டத் தொழிலாளர்கள் திங்கட்கிழமை தொடக்கம் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். அதனை முறியடிப்பதற்காகவே மேற்குறிப்பிட்ட சட்டவிதிகளை அரசு மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்ததாகப் பொதுவாகக் கூறப்படுகிறது. வெளித் தோற்றத்துக்கு அவ்வாறு தெரிந்தாலும் கூட இது அடுத்த வருட இறுதியில் அல்லது மத்தியில் நடக்க இருக்கும் பொதுத் தேர்தலை மையமாகக் கொண்ட நீண்ட அரசியல் உள்நோக்கமுடைய ஏற்பாடு என்பதே உண்மை.

மத்திய மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று செவ்வாய்க்கிழமை விவாதித்து வாக்கெடுப்புக்கு விடப்படவிருந்தவேளையில்—

நம்பிக்கையில்லாப் பிரேரணையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆதரிக்கப் போவதாக அறிவித்த நிலையில்—

மாகாண சபையின் இ. தொ. கா. உறுப்பினர்கள் எழுவர் கடத்தப்பட்டனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்திலேயே தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். ஆகையால் அது ஓர் அரசியல் வேலை நிறுத்தம் என்பதில் ஐயமில்லை.

எனினும் அரசாங்கம் தனது தரப்புக்குத் தோல்வி ஏற்படக்கூடாது என்பதற்காக ஜனநாயக விரோதமாக உறுப்பினர்களைக் கடத்தியதாலேயே வேலை நிறுத்தம் நடக்கிறது. அதனை மறைத்து, நுவரெலியாப் பகுதித் தொழிலாளரின் வேலை நிறுத்தத்தை முறியடிப்பது என்ற போர்வையில் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை நாடு முழுவதிலும் தடைசெய்ய அரசு முனைந்திருக்கிறது.

அரசுக்கும் இ. தொ. காவுக்கும் இடையில் உள்ள உறவு அனேகமாக முறியும் தறுவாயில் உள்ளது. ஆகையால் மலையகத்தில் வேலை நிறுத்தங்கள் தொடரும் வாய்ப்புண்டு. வேலை நிறுத்தங்கள் மட்டுமன்றி, மலையகத்தில் பெரும் அரசியல் குழப்பங்களே ஏற்படும் சாத்தியம் பெரிதும் உள்ளது. இதனை உணர்ந்தே அவற்றை அடக்குமுறை வழிசார்ந்து தடுப்பதற்கு அரசு திட்டமிடுகிறது. அந்த அடக்குமுறைக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரம் வழங்கும் ஏற்பாடே சட்டரீதியான தடையும் தண்டனையும்.

மேலும்—

வடக்கு - கிழக்கில் படைகளுக்கு ஏற்படும் தோல்விகளால் சிங்கள மக்கள் அரசின் தவறான கொள்கைகளையும் செயற்பாடுகளையும் புரிந்து கொள்ள தெற்கில் உள்ள பத்திரிகைகள் உதவி விடுமோ என்ற அச்சம் அரசுக்குத் தானாகவே உண்டாகியிருக்க வேண்டும். யாழ்தேவி, பூநகரித் தோல்விகள் குறித்து வெளிவந்தது போன்ற செய்திகள், விமர்சனங்கள் அரசுக்கு எதிரான உணர்வை உண்டாக்கியதை அரசு தெரிந்துகொண்டிருக்கும். அதனை வளரவிடாது தடுத்து விடுவதற்கே திங்கட்கிழமை பிரகடனப்படுத்தப்பட்ட சட்டவிதிகள். அதனை வளரவிட்டால் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும்கட்சி தோற்றுப் போகலாம் என்ற பயம்.

மொத்தத்தில் அரசின் கொள்கைகள், தவறுகளை சுட்டிக் காட்டும், விமர்சிக்கும் அடிப்படை உரிமைகளை நசுக்கும் சர்வாதிகாரத்தின் ஆரம்பம் இது. சிங்கள மக்கள் ''பட்டிழுத்துப்''பார்க்கட்டும்!

## கடதாசியுடன் செல்லும் நோயாளர்கள்!

மானிப்பாய்க் கிறீன் வரும் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் மருந்து எழுதிக் கொடுப்பதற்கான கடதாசியையும் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் காயங்களுக்கு மருந்து கட்ட செல்பவர்கள் அதற்கான பழம் சீலைத் துணிகளையும் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. டஞ்சு பண்டேஜ் என்பனவற்றிக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருகிறது. (ஓ-135)

## சைக்கிள்கள் மீட்பு

தென்மராட்சி, டிச 22

தென்மராட்சிப் பகுதியில் திருட்டுப் போய் காவல்துறையினரால் மீட்கப்பட்ட ஏழு சைக்கிள்கள் சாவகச்சேரி காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் ஆதாரங் காட்டி சைக்கிள்களை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-117)

ஐ. நா. பொதுச்சபை ஏகமனதாகத் தீர்மானம்

# மனித உரிமைகளைப் பேண

# ஐ.நா.உயர் தூதுவர் நியமனம்

ஐ. நா. டிச 22

மனித உரிமைகளுக்கான ஐ. நா. உயர் தூதுவர் பதவி ஒன்றை உருவாக்குவது என்று ஐ. நா. பொதுச்சபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

இந்த தூதுவரை ஐ. நா. பொதுச் செயலாளர் நியமனம் செய்வார். ஐ. நா. பொதுச்சபை அந்த நியமனத்தை அங்கீகரிக்க வேண்டும்.

மேற்கண்ட நியமனம், தங்கள் உள்நாட்டு விவகாரங்களில் ஐ. நா. தலையீட்டுக்கு வழிவகுக்கும் என்று இந்த யோசனையை முன்னர் எதிர்த்த நாடுகள் காரணம் காட்டியிருந்தன.

உலக நாடுகளில் உள்ள அகதிகளின் புனர்வாழ்வு வேலைகளைக் கவனிக்க அகதிகளுக்கான ஐ. நா. தூதுவர் தற்போது ஐ. நா. மேற்பார்வையின் கீழ் பணியாற்றுவது போன்று —

உலக நாடுகளில் மனிதஉரிமைகளைப் பேணப்படுவதைக் கவனிப்பதில் புதிதாக நியமிக்கப்படும் மனித உரிமைகளுக்கான ஐ. நா. உயர் தூதுவர் ஐ. நா. வின் மேற்பார்வையில் செயற்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ எ)

## தெரு விளக்குகளை அமைக்க 'கோரிக்கை

வலி- தென்மேற்கு பிரதேச எல்லைக்குள் தெரு விளக்குகளை அமைத்துப் பராமரித்து உதவுமாறு பொது ஸ்தாபனங்களையும் மற்றும் தனிப்பட்டோரையும் வலி-தென்மேற்கு விசேட ஆணையாளர் திரு. கா. சந்திரராசா கேட்டுள்ளார்.

இதற்கிணங்க ஆனைக்கோட்டை கூளாவடி புற்கை தின்னி பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர் ஆலய முன்றலிலுள்ள பிரதான வீதியில் தெரு விளக்கு ஒன்றை அமைத்துள்ளனர் (ஓ-135)

## உலகில் 5 பேரில் ஒருவர் வறுமையில் வாடுகிறார்!

### யுனிசெப் நிறுவனம் தகவல்

ஜெனீவா, டிச. 22

உலகில் ஐந்து பேர்களுக்கு ஒருவர் பூரணமாக வறுமையில் வாடுகின்றார் என்று யூனிசெப் நிறுவனம் அறிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே வறுமையில் வாடுபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அறிக்கையில் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அதிகரித்து வருகிறது. அப்படி இருந்தும் அதிகரித்து வரும் சனத்தொகை வறுமையை ஒழிக்கும் நடவடிக்கைகளைச் சரிவரச் செயற்படுத்த முடியாதபடி நிர்ப்பந்திக்கின்றது என்றும் யுனிசெப் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விதை உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு விநியோகம்

### கடும் மழையால் நடுகை தாமதம்

யாழ்ப்பாணம், டிச. 22

யாழ் மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத் திற்கு றுகுணு கப்பலில் ஒவ்வொன்றும் 50 கிலோ கிராம் எடையுள்ள 3,098 பெட்டிகளில் 155 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு எடுத்து வரப்பட்டிருந்தது.

உடுவில் கமநல சேவை நிலையத்தின் ஊடாக 774 பெட்டிகளும், உருமபராய் கமநல சேவை நிலையத்தின் ஊடாக 1 090 பெட்டிகளும், புத்தூர் கமநல சேவை நிலையத்தின் ஊடாக 766 பெட்டிகளும், புலோலி கமநல சேவை நிலையத்தின் ஊடாக 95 பெட்டிகளும், நல்லூர் கமநல சேவை நிலையத்தின் ஊடாக 334 பெட்டிகளும் விவசாயிகளுக்கும் பொது அமைப்புகளுக்கும் விதை உருளைக்கிழங்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் டிசம்பர் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியே இங்கு விதை உருளைக்கிழங்கை நடுவதற்கு ஏற்ற காலப்பகுதியென சிபாரிசு செய்யப்பட்டிருந்தும், தற்போதைய கடும் மழை காரணமாக நடுகை தாமதமடைந்து வருகின்றது.

விதை உருளைக்கிழங்கிற்கான அறுவடைக்காலம் 90 நாட்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-162)

## லெப். அன்பு நினைவாக உடுவிலில் குடியிருப்புகள்

வலிகாமம் தெற்கு, டிச. 22

வலிகாமம் மேற்கு பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள 19 குடியிருப்பாளர்களுக்கு முல்லை — மணலாறு மாவட்ட சிறப்புத் தளபதி லெப். அன்பு ஞாபகார்த்தமாக உடுவில் கிராமத்தில் குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் மாதிரிக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் உடுவில் ஆலடிப்பகுதியில் தலா ஒரு பரப்புக் காணியில் இந்த குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான வைபவத்தில் தமிழர் புனர் வாழ்வுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. ரவி, சுன்னாகம் காவல் துறை பொறுப்பாளர் செல்வி யோ. பிரீத்திராணி ஆகியோர் மங்கள விளக்கேற்ற திரு. வெள்ளை தேசிய கொடியை ஏற்றி வைத்தார்.

உடுவில் வட்டவை பொறுப்பாளர் திரு. ஒப்பிலறிவன் தலைமையில் மாதிரிக் குடியிருப்பை வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் திரு. திருக்குமரன் திறந்து வைத்தார்.

குடியிருப்பாளர்களுக்கான திறப்புகள் யாழ்ப்பாண மாவட்ட அரசியல் துணைப் பொறுப்பாளர் திரு. இளையவன் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் திரு பாலகிருஷ்ணன் ஆகியோரால் குடியிருப்பாளர்களுக்கு கையளிக்கப்பட்டன. (இ- 152)

நம்பிக்கையில்லாப் பிரேரணை

## 'ஏழு கூரிய வாள்களாக' என் தலைமீது தொங்குகிறது

### இப்படிக் கூறுகிறார் முதலமைச்சர்

கொழும்பு, டிச 22

எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை என் தலை மீது ஏழு கூரிய வாள்களாக தொங்குகிறது.

மத்திய மாகாண முதலமைச்சர் டபிள்யு பி. பி. திசாநாயக்கா மாவத்தகமையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து தாம் கவலைப்படவில்லை என்று கூறிய அவர், எவ்வித எதிர்ப்பு வரினும் தொடர்ந்து பணிபுரியப் போவதாகவும் கூறினார்.

வெள்ளப் பாதிப்புக்கள் குறித்து

## அரச அதிபர் தலைமையில் செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச.22

யாழ். மாவட்டத்தில் வெள்ளத்தினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ். அரச அதிபர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் உதவி அரச அதிபர்கள் கலந்து கொள்வர்.

ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவிலும் வெள்ளத்தால் ஏற்பட்ட சேத விவரங்களை சமர்ப்பிக்குமாறு யாழ் அரச அதிபர் உதவி அரசாங்க அதிபர்களைக் கேட்டுள்ளார். (ஓ-3)

## குரக்கன் கொள்வனவு

யாழ்ப்பாணம், டிச. 22

குரக்கன் பயிர்ச் செய்கையாளரது உற்பத்தியினை சந்தைப்படுத்துவதன் ஊடாக குரக்கன் செய்கையை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடன், அவர்களிடமிருந்து குரக்கனை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் இந்தமுறையும் யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

குரக்கன் செய்கையாளரிடமிருந்து வட்டாரீதியாக இதுவரை 13 ஆயிரத்து 340 கிலோ குரக்கன் கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலமாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஓ)

### பனை விதை நடுகை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பனைவிதை நடுகைத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 2,500 பனை விதைகளை நட்டுள்ளது.

இதில் 1,500 விதைகள் கைதடி அரசினர் ஆஸ்பத்திரி வளாகத்திலும், 750 விதைகள் முதியோர் இல்ல வளாகப் பகுதிகளிலும், 250 விதைகள் சங்கக் காணியிலும் நடப்பட்டுள்ளன. (ஓ)

## யாழ். மாநகரசபைப் பகுதியில்

## மழை வீழ்ச்சி அதிகம்; நீர் வெளியேற்றம் குறைவு

### வெள்ளம் ஏற்பட இதுவே காரணமாம்

யாழ்ப்பாணம், டிச. 22

அண்மைய ஆண்டுகளை விட இம்முறை மழை வீழ்ச்சியின் அளவு அதிகரித்திருக்கிறது. ஆனால் நீரை வெளியேற்றும் அளவு குறைந்தது. யாழ். மாநகரசபைப் பகுதியில் பல இடங்களில் வெள்ளம் தேங்கியதற்கு இதுவே காரணம்.

யாழ் மாநகர சபையின் மராமத்துப் பொறியியலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரியாலை, நாயன்மார் கட்டு, சுண்டிக்குளி, நல்லூர், கல்வியங்காடு ஆகிய பகுதிகளில் இருந்து சேரும் மழை நீர் செம்மணி வயல் பகுதிக்குள் சென்று அங்கிருந்து நாவற்குழி பாலத்தின் கதவுகள் (துருசுகள்) ஊடாக வெளியேறுவது வழக்கம். ஆனால் கதவுகள் ஊடாக வெளியேறும் மழை நீரின் கொள்ளளவு தற்போது குறைந்துள்ளது. இதன் காரணமாகவும் மேற்சொன்ன பகுதிகளில் மழை வெள்ளம் தேங்கியுள்ளது என்றும் அவர் சொன்னார்.

திருநெல்வேலி, கோண்டாவில் பகுதிகளில் இருந்து யாழ். நகரப் பகுதியை நோக்கி வரும் மழை வெள்ளத்தின் பெரும் பகுதி திருநெல்வேலி பரவைக் குளத்துக்குள் தேங்குவது வழக்கம். இம்முறை பெருவெள்ளம் காரணமாக பரவைக்கடல் நீரால் மேவியுள்ளது. இதனால் நகரில் உள்ள ஏனைய குளங்கள் சிலவற்றில் வெள்ளம் நிறைந்து பெருகியுள்ளது என்று அவர் மேலும் விவரித்தார்.

இதேவேளை —

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் தூர்ந்து போன கால்வாய்களை புனரமைக்கும் பணியில் யாழ். மாநகரசபை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஓ-5-162)

## முத்திரைக்கு தட்டுப்பாடு

நெல்லியடி, டிச. 22

குடாநாட்டில் தபால் முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த இரு மாதங்களாக யாழ். குடாநாட்டிற்குரிய தபால் பொதிகள் எவையும் இங்கு வந்து சேராததினால் தபால் முத்திரைகளும் கொண்டுவரப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-109)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிச. 22

இம்மாதம் 18 ஆம் திகதி நடைபெறவிருந்த யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபையினருடனான கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-162)

## பரிசளிப்பு விழா

அச்சுவேலி, டிச. 22

அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு நாள் நிகழ்வுகள் இன்று புதன் கிழமை வித்தியாலய அதிபர் திரு க. இராசதுரை தலைமையில் நடைபெறும்.

பரிசளிப்பு நாள் விழாவில் யாழ்ப்பாணம் வடக்கு வலய கல்விப்பணிப்பாளர் திரு கே கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கியுள்ளார். (ஓ-11)

★ ★ ★

அச்சுவேலி, டிச. 22

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை நடைபெறும்.

அதிபர் திருமதி க. சகுந்தலாதேவி தலைமையில் நடைபெறவிருக்கும் பரிசளிப்பு விழாவில் முன்னாள் மருதனார் மடம் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கியுள்ளார். (ஓ-11)

## நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிச. 22

கொழும்புத்துறை வயோதிபர் இல்லத்திற்கென 57 ஆயிரத்து 700 ரூபா நிதி யாழ்ப்பாணம் பிரதேச செயலாளருக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. (ஓ-162)

THE ROTARY CLUB OF JAFFNA

ENGLISH ESSAY CONTEST

Rotary District 3220 Sri Lanka is Organizing a National Level English Essay Contest 1993.

★ Theme: Preventing Teen Drug Abuse: Challenges and Solutions
★ Medium: English
★ Words: 450 — 600 Words (Typed or Clearly Printed)
★ Age Limit: 12 — 16 years
★ Closing date: 28th December 1993.
★ Essays will be evaluated based on knowledge of the Subject, Logical development and clarity of ideas presented.

Selection will be done by a Committee appointed by the Rotary District Governor.

The best ten essays will be awarded prizes at the Rotary District Conference 1994.

Attach the following entry form with the Passport Size Photograph and the Essay and send it to:

ROTARY ESSAY CONTEST-1993
C/O UTHAYAN,
NAVALAR ROAD, JAFFNA.

—ENTRY FORM—

Name of the Author:
School:
Class:
Age:

I Certify the above Particulars are Correct.

Principal
School Seal.

Date: ......

(C-6727)

பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை 1993இல் சித்தியடைந்த மாணவச் செல்வங்களையும், அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம். அத்துடன் கோப்பாய் பிரதேச வட்டத்தில் அதி கூடிய மாணவர்கள் 12 பேர் மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது

| பெயர் | | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 1. | செல்வி க. கவிதா | 170 |
| 2. | செல்வி ஜெ. ஜெபசுதா | 165 |
| 3. | செல்வன் ப. சதீஸ் | 165 |
| 4. | செல்வன் த. பிரியந்தன் | 164 |
| 5. | செல்வி பா. டிஷானி | 162 |
| 6. | செல்வி க. பிரிந்தினி | 158 |
| 7. | செல்வன் ஸ்ரீ ஜனகரூபன் | 157 |
| 8. | செல்வி தி. தாரணி | 148 |
| 9. | செல்வி த. பிரதீபா | 147 |
| 10 | செல்வி ந சுகாசினி | 145 |
| 11. | செல்வன் க. கவியரசன் | 136 |
| 12. | செல்வன் ச. இரவிசங்கர் | 136 |

பெற்றோர்கள்

உரும்பராய். (6866)

C.C.C. கிளினிக்
[City Clinical Consultation]

தற்காலிகமாக எமது C. C. C. கிளினிக் ஸ்தாபனம் Hotel Gnanams கட்டடத்தின் ஒரு பகுதியில் இன்று 22-12-1993 புதன்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

அன்றைய தினம் தொடக்கம் எமது வழமையான கண், பொதுவைத்தியம் மற்றும் சகல வைத்திய ஆலோசனைகளும் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

நன்றி

இப்படிக்கு
உரிமையாளர்.
C.C.C. கிளினிக்.

ஹொட்டல் ஞானம்ஸ்
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/6741)

சாவகச்சேரி பிரதேச சபை
வரவு செலவுத் திட்டம் 1994

1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைச் சட்டம் 15ன் 168 (1)ன் கீழ் எம்மால் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் சபையின் தலைமைப் பணிமனையில் 20-12-93 தொடக்கம் ஏழு (7) நாட்களுக்கு அலுவலக நேரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

பு. சுந்தரம்பிள்ளை.
விசேட ஆணையாளர்
சாவகச்சேரி பிரதேச சபை.

கொடிகாமம்,
15-12-93.

(சி-6744)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுண்டிக்குளி பரி. யோவான் ஆலய சிறுவர் பாடசாலை

சிறுவர்களுக்கான விண்ணப்பங்கள் திரும்ப ஒப்படைக்கும் இறுதி நாள்: 30 – 12 – 93. சிறுவர் பாடசாலை ஆரம்பமாகும் நாள்: 10 – 01 – 94. 30 – 12 – 93க்கு பின்னர் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா என்பதை பெற்றோர் கவனத்தில் கொள்ளவும்.

மேற்பார்வையாளர்,
பரி. யோவான் ஆலய சிறுவர் பாடசாலை.
(28532)


# மரண அறிவித்தல்கள்

## வேலன் சண்முகம்

(முறிவு நெரிவு வைத்தியர்)

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட முறிவு நெரிவு வைத்தியரும் மூளாயில் வைத்தியம் செய்து வந்தவருமாகிய வேலன் சண்முகம் 20 - 12 - 93 இல் காலமானார் என்பதை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
ச. சுந்தரலிங்கம்
சி/6751

## முருகேசு ஆறுமுகம்

காரைநகர் பாலாவோடையை பிறப்பிடமாகக் கொண்டவரும், கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய முருகேசு ஆறுமுகம் காலமாகிவிட்டார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும், சுந்தரலிங்கம், கனகாம்பாள், புவனேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னம்மா, கதிரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுப்பிரமணியம், தம்பிராசா, கனகரத்தினம், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கிளிநொச்சியில் இன்று (22 - 12 - 1993) நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
க. வே. சுப்பிரமணியம்
[மைத்துனர்]

பறாளாய் வீதி,
சுழிபுரம் மத்தி.
(28546)

## சங்கரப்பிள்ளை ஆறுமுகம் கந்தையா

காரைநகர், களபூமி விளானையை பிறப்பிடமாகக் கொண்ட சங்கரப்பிள்ளை ஆறுமுகம் கந்தையா அவர்கள் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற செல்லாச்சியின் அன்புக் கணவரும் செந்தில்நாதன் (உரிமையாளர் சன் ஸ்ரோர் கண்டி), மகேஸ்வரி, தனலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தராஜா, காலஞ்சென்ற S. A. நடராஜா செந்தில், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் 22 - 12 - 93 புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தனலட்சுமி (மகள்)

உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒழுங்கை,
சண்டிலிப்பாய்.
21 - 12 - 93.
(28547)

## மார்கிறற் நேசரட்ணம்

அச்சுவேலியை பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற B.B.யோசவ்வின் மனைவி மார்கிறற் நேசரட்ணம் 19-12-93 இல் செல் பிரான்ஸ்ஹோமில் காலமாகிவிட்டார். அன்னார் அருட் திரு அட்றியன் யோசவ் அ.ம.தி. அலிக்கா பிலிப்ஸ், காலஞ்சென்ற அன்றூ, போல், லடிஸ்லோஸ், லெனெற், அலக்ஸான்டர், அருட் திரு தியோஜினஸ் ஆகியோரின் தாயாருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
அருட் திரு அட்றியன் யோசவ்
அ ம தி

புனித பிரான்சிஸ் சேவியார் குருமடம்
கொழும்புத்துறை
(28548)

## பொன்னம்மா சிதம்பரநாதன்

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா சிதம்பரநாதன் கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதனின் அன்பு மனைவியும் திருமதி தவமணி சிவரத்தினம், ஜெகநாதன், நங்கநாதன், நடேசன், இரத்தின சோதி, ஜெகஜோதி, திருமதி ஜெகதாம்பாள் ஞானகுருபரன், திருமதி சாரதாம்பாள் சந்திரதேவன், ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். ஈமக்கிரியைகள் 20-12-93 அன்று கொழும்பில் நடைபெற்றன.

தகவல்
Dr. சாரட்னம்
(28545)

## திருமதி சரவணமுத்து இலட்சுமி

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கச்சாயில் வசித்தவரும் ஆகிய திருமதி சரவணமுத்து இலட்சுமி 21 - 12 - 93 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சரவணமுத்து ஆசிரியரின் அன்பு மனைவியும், இரத்தினசிங்கம் (ஆசிரியர் கம்பளை), பாலசந்திரன் (அதிபர் புனுமெல்ட அ.த.க பாடசாலை கொழும்பு), பவளம், பத்மநாதன் (ஓமான்), மைனா, வதனா (ஜேர்மனி), அனுஷா ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசலட்சுமி (எழுதுவினைஞர், கச்சேரி கொழும்பு) பராசக்தி (தாதி யாழ் போதனா வைத்தியசாலை), பேர்மன் ஜெயராசா (தொலைத் தொடர்புத் திணைக்களம்), சதானந்தன் (ஜேர்மன்), ஜெகதீஸ்வரன் ((ஜேர்மன்), தம்பி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 22 - 12 - 93 பி. ப. 1 00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கச்சாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
[illegible]

கச்சாய் தெற்கு,
கச்சாய்.
[illegible]

## குருத்துவ வெள்ளி விழா



### அருட் திரு பிரான்சிஸ் டானியல் (அ.ம.தி) அடிகளாரின்

துறவறவாழ்வின் இருபத்தைந்து ஆண்டு நிறைவு விழா நன்றித் திருப்பலியை இன்று (22-12-93) காலை 10 மணிக்கு கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் நிறைவேற்றுகிறார். அடிகளாருடன் இணைந்து இறைவனுக்கு நன்றி கூற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்.
(28543)


★ நத்தார் வாழ்த்து மடல்கள்
★ நத்தார் கேக் சாமான்கள்
★ நத்தார் சோடனைப் பொருள்கள்
★ நத்தார் மரங்கள், பூக்கள்
★ நத்தார் பாலன் பிறப்பு செட்
★ விளையாட்டுச் சாமான்கள்
★ எவர்சில்வர் சாமான்கள்
★ குளிர் பானம் தயாரிக்கும் சாமான்கள்
★ பான்சி, பிறசென்டேசன்
★ ஸ்போட்ஸ் சாமான்கள்

இன்னும் பல ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

## ராஜூ ஸ்ரோர்ஸ்
"ராஜூ பில்டிங்"

67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி 6817)



## ST JOHN'S INSTITUTE FOR CAREER GUIDANCE

## COMPUTER STUDIES

Result Oriented Computer Studies in Jaffna
Education Qualification – no barrier!

Catering to:
★ School leavers and those Qualified for University admissions.
★ Students in O/L, A/L Classes
★ Students in year 9/10 Classes too

Courses:
★ Introduction to Computers and GWBASIC (2½ Months)
★ D BASE 111+ (3 Months)

Next Batch: 5th Jan 1994
Application Close: 30th Dec. 1993
REGISTRAR,

ST JOHN'S INSTITUTE FOR CAREER GUIDANCE
ST. JOHN'S CHURCH,
MAIN STREET,
CHUNDIKULI.
(28535)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 18 – 07 – 1962



உதிர்வு: 02 – 01 – 1993

### நடராசா இராசலிங்கம் (கிளி)

எங்கள் அருமை அப்பாவே எங்களை ஏங்கவிட்டு எங்கு சென்றீர்கள். ஆறாது ஆறாது அழுதாலும் தீராது நீயாசிப்போன நிலை நினைவிலும் மாறாது. ஆசை அப்பாவே இன்றோ அன்னை, தங்கை ஒரிடமும் நாம் வேறிடமாகவும் இன்னல்களால் துடிக்கின்றோம். நீங்கள் பிரிந்துசென்று ஓராண்டு கடந்து விட்டாலும் தங்கள் நினைவு எங்கள் மனங்களில் அழியாத சித்திரமே.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்

சரவணை கிழக்கு,
வேலணை. (பொக்குவில்)
(6867)


இப்பத்திரிகை [illegible] உதயன் பப்ளிகேசன் [illegible] லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] அச்சகத்தில் 22 12 1993 இல் அச்சிட்டு [illegible]


## இன்று

யாழ்ப்பாணம், டிச. 22

யாழ் மாவட்ட கணித விஞ்ஞான ஆலோசனை நிலையத்தால் நடத்தப்பட்ட கணித பாட விசேட செயலமர்வில் கலந்து கொண்ட ஆண்டு 11 மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்ச்சி இன்று பிற்பகல் 2. 30 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## டி. பி. அரசில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனபேதம் இருந்தது. ஜே. ஆர். காலத்தில் இருந்தது. பிரேமதாஸ காலத்தில் ஓரளவு இருந்தது. ஆனால் பிரேமதாஸ அதனை எதிர்த்து உறுதியாக இருந்தார். அதனால் அந்த மாதிரி எண்ணங்கள் குறைந்து வந்தன.

டி. பி. விஜேதுங்காவின் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் இனபேதம் மீண்டும் மிகத் தீவிரமாகத் தலை தூக்குகிறது.

அவ்வாறு தலைதூக்குவதால்தான் நாம் உறுதியாக செயற்பட வேண்டி நேரிட்டுள்ளது.

கேள்வி: தென்பகுதிச் சிங்களவருக்குத் தாங்கள் இப்போது பலிக்கடாவாக மாறி விட்டீர்கள். தொண்டமானும் தமிழரும் கேட்பது அனைத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

பத்திரிகைகளிலும் அன்றாடம் தங்களைத் தாக்கிக் கட்டுரைகள் வந்த வண்ணம் உள்ளன. இவை பற்றி என்ன கூறவிரும்புகின்றீர்கள்?

தொண்டா:- பத்திரிகைகள் மாத்திரம் அல்ல இனவாதிகள் மட்டும் அல்ல; அரசாங்கம் கூட அந்த மனப்பான்மையை வளர்க்கப்பார்க்கின்றது.

அதனை அம்பலப்படுத்தத்தான் நான் இப்படி வெளியே வந்து இப்பிரச்சினையை உண்டாக்கி முடிவு எடுக்கப்பார்க்கின்றேன் என்றார். (அ-எ)

## அதிகாரிகள்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்களை காலதாமதமாக வழங்கியதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நேரத்தில் நிவாரணம் வழங்கப்படவில்லை.

நிவாரணம் என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்க வேண்டும். இதில் அரச அதிகாரிகள் கவனமாகச் செயற்பட வேண்டியது அவசியமே.

ஏனைய உதவி அரச அதிபர்களும் வடமராட்சி வடக்கு உதவி அரச அதிபரையும், கிராம சேவையாளர்களையும் போன்று செயற்படாமல், துரிதமாகச் செயற்பட்டு பாதிக்கப்பட்ட மக்களைப் பாதிப்பிலிருந்து காப்பாற்ற உதவுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது — இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-த-5)

## கப்பலிலிருந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர் பார்க்கப்படுகிறது.

"மாஹோ" கப்பலில் இன்னமும் 8 ஆயிரத்து 700 வரையான மண்ணெண்ணெய்ப் பரல்கள் இறக்கப்பட வேண்டி இருப்பதாகவும் காலநிலை சீராக இருந்தால் இன்னும் இரண்டொரு தினங்களில் அவை இறக்கி முடிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

'மாஹோ' கப்பலில் சுமார் 100 வரையான பயணிகள் திருமலை செல்லவுள்ளனர்.

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை இந்தக் கப்பலில் அனுப்பி வைக்க யாழ். கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-5)


## எடிசன்
அக்கடமி
(யாழ் இந்து அருகில்)
கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
BY
BRITTO

ஆரம்பம்:
23-12-1993
பிற்பகல் 4-45
TIME TABLE
வியாழன், வெள்ளி
4-45 மணி
(சி 6813)




## மக்கள் வங்கி

எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர்
பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சைக்குரிய
பயிற்சி வகுப்புக்கள்
20 – 12 – 1993 ஆரம்பமாகி விட்டன.
(3 மணி)
40 மணித்தியால வகுப்புக்கள்

விபரங்களுக்கு:
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-6815)


## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 17 – 05 – 1944



அழிப்பு: 02 – 01 – 1993

அமரர்

### உயர்திரு ஆறுமுகம் தர்மராஜா

(உதவிக் கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி)

திதி: 22 - 12 - 1993

பண்பான நாயகனாய் அன்பான தந்தையாய் அரிய சகோதரனாய் குடும்ப ஒளி விளக்காய் எல்லோர்க்கும் நல்லவனாய் சமூக சேவையின் கொடிமரமாய் நின்று கடமையே கண்ணென மதித்து இன்னுயிர் ஈந்த சான்றோன் தர்மராஜனே! நின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைக் கைகூப்பிப் பிரார்த்திக்கின்றோம்.

அன்றும் இன்றும் என்றும் நீங்காத உன் நினைவில் ஆறாத் துயருறும்;

மனைவி மக்கள்.
பெற்றோர், உற்றார், உறவினர்
அனைவரும்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.
[சி-5743]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### கணபதிப்பிள்ளை விசாலாட்சி

(6ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

தோற்றம்: 10–10–1910
மறைவு: 22–11–1993

கடந்த 22-11-1993இல் அமரத்துவம் அடைந்த எமது அன்பு அன்னை திருமதி கணபதிப்பிள்ளை விசாலாட்சி அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியை இன்று 22-12-1993இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சமூகம் தந்து அன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையம் சாத்திய யாழ். செயலகம், நிர்மாணத் திணைக்களம், யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலய நலன் புரிச்சங்கத்தினருக்கும் மற்றும் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
குடும்பத்தினர்
(28540)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org